சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.39/2024</u>

12.03.2026

வா.சா. 2 திரு.மணி, த/பெ. கணேசன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி சச்சிதானந்தம் விவசாய தொழில் செய்து வருகிறார். எனது முதல்விசாரணையில் வாதியிடம் பிரதிவாதி தனது குடும்ப செலவிற்காகவும், சில்லறை கடனை அடைப்பதற்காகவும் பணம் கேட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி ஆண்டியூர் கிராமத்தில் வசித்து வருகிறார். வாதி புத்தகலூர் பிள்ளையார் கோவில் தெருவில் வசித்து வருகிறார். வாதியின் மகன் ஜீவா வாதியின் முகவரியில்தான் வசித்து வருகிறார் என்றால் இல்லை, அவர்களுக்குள் சண்டை. வாதியின் மகனும் வாதியும் தனித்தனியாக தான் வசித்து வருகிறார்கள். கதவு எண் எனக்கு தெரியாது. பிரதிவாதி நான் வீட்டிலிருந்த போது 10.09.2020 அன்று வாதியிடம் கடன் வாங்க போவதாக சொல்லி என்னை அழைத்தார். எங்கள் ஊரிலிருந்து எரவாஞ்சேரி கிராமம் 3 கி.மீ தூரத்தில் உள்ளது. பிரதிவாதி வாதியிடம் காசோலை கொடுத்த விவரம் தெரியும். காசோலை எண் எனக்கு தெரியாது. நான் எரவாஞ்சேரிக்கு சென்றேனா என்றால் இல்லை. காசோலையை வங்கியில் செலுத்திய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. செந்தில்குமார் சேங்கனூரை சேரந்தவர். மகாதேவன் மாப்பிள்ளைக்குப்பம் கிராமம் ஆகும். செந்தில்குமாரும் மகாதேவனும் சேங்கனூர் சென்ற விவரம் எனக்கு தெரியாது. கடனுறுதிசீட்டில் உள்ள ஸ்டாம்ப் மீது கையெழுத்து போட்டாரா என்றால் கைரேகை வைத்து கையெழுத்து போட்டுக்கொடுத்தார். கடனுறுதிசீட்டில் ஒட்டப்பட்ட ஸ்டாம்ப் மீது கையெழுத்து இல்லை, கைரேகை வைத்துள்ளார். கைரேகை யாருடையது என நிரப்பப்படவில்லை என்றால் பணம் வாங்கியவர் பெயர்தான் கைரேகையில் உள்ளது. கடனுறுதிசீட்டில் ஒன்றாவது சாட்சி கையொப்பம் போட்டவர் செந்தில். செந்தில் கையெழுத்துக்கு அடுத்து அவரின் முகவரி எழுதவில்லை என்றால் சரிதான். செந்தில் கையெழுத்துக்கு கீழ் உள்ள தேதியில் அடித்தல், திருத்தல் உள்ளது என்றால் சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டில் உள்ள கையெழுத்தும், கைரேகையும் பிரதிவாதியுடையது அல்ல என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பிரதிவாதி

வாதியிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும் அதற்காக ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அதே போல் சாட்சிகள் செந்தில்குமார், மகாதேவனும் அந்த இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான், மகாதேவன், செந்தில்குமார் ஆகியோர் வாதியிடம் வேலை செய்கிறோம் என்றாலும் அதற்காக அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.